DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 59/2020

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Father's/Husband's Name : | ராமையா |
| Village | : வண்டியூர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** தாவா சொத்துக்கள் முதலில் எனக்கும் எனது தந்தைக்கும் பொதுவாக பாத்தியப்பட்டிருந்து எங்களுக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து பிரதிவாதி இராமருக்கு நாங்கள் இருவரும் ஒரு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி சொத்தை பிரதிவாதி தங்களது கூட்டு குடும்ப வருமானத்தை வைத்து கிரையம் வாங்கி அவரும் அவரது குடும்பத்தை சேர்ந்தவர்களும் பொதுவில் வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் மறு கிரையம் வாங்கி விட்டோம். கடந்த 20.01.2014 ஆம் தேதி பிரதிவாதி தனது மகள் மகாலட்சுமி பெயருக்கு தாவா சொத்தை பொருத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 14.07.1992 ம் தேதி நானும் எனது அப்பாவும் பிரதிவாதி ராமரும் சேர்ந்து எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியுடை மகன், மகள் தரப்பினரர்களாக இருக்கிறார்களா என்று கேட்டால் பிரதிவாதிக்கு மக்கள் இல்லை, அவருக்கு திருமணமே ஆகவில்லை.

2) பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றும் அவருக்கு பிள்ளைகள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆண்டிபட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.7/2002 என்ற வழக்கு தாக்கல் செய்து அது எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பான பின்பு E.P.23/2006 என்ற மனு தாக்கல் செய்துநீதிமன்றத்தின் மூலம் எங்கள் பெயருக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த E.P. உத்தரவில் ரூ.1000/- நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இழப்பீட்டு தொகையை பெற நீதிமன்றத்தில் மனு செய்தோமா

என்று கேட்டால் இல்லை. நீதிமன்றத்தால் எனது பெயருக்கு கிரையப் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட பிறகு தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக அந்த உத்தரவில் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) பொதுவாக நீதிமன்றத்தின் மூலம் கிரைய் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்த பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து தான் சொத்தின் சுவாதீனத்தை பெறவேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கிரைய பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டு 12 வருடத்திற்குள் சொத்தின் சுவாதீனத்தை பெற மனு செய்யாவிட்டால் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெற அதன் பிறகு எனக்கு எந்த தகுதியும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தை பெற நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகளின் அனுபவத்தை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் 3ம் வாதி கடந்த 21.09.2020ம் தேதி பிரதிவாதி மீது பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் பிரதிவாதி மரத்தை வெட்டியதால் புகார் கொடுத்தோம்.

4) தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னாலும், அவர்களின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யும் வகையில் அவர்களுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் சொத்தின் சுவாதீன்தை பெறுவதற்கு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் படி என்னை அறிவுறுத்தினார்கள் என்று சொன்னால் காவல்நிலையத்தில் சொத்தை பற்றி விசாரணை செய்யவில்லை. காவல்நிலையத்தில் விசாரணை செய்யவில்லை என்பாற்காக மேல் அதிகாரிகளிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. O.S7/2002 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை பெற காலக்கெடு முடிந்துவிட்டதால் நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

5) பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற சட்டப்படியான நடவடிக்கை தான் எடுக்க வேண்டுமே தவிர தன்னிச்சையாக தாவா சொத்தில் பிரவேசித்து சட்டத்திற்கு புறம்பாக அவர்களை வெளியேற்ற முடியாது என்று சொன்னால் சரியல்ல, நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். தாவா சொத்தில் நான் அனுபவத்தில இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சட்ட நிலைக்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2025.11.06 15:50:33 +0530

District Munsif,
Aundipatti.

DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.59 /2020

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father's/Husband's Name : | ராமலிங்கம் |
| Village | : பழையகோட்டை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. கடந்த 21/9/2020 ஆம் தேதி பிரதிவாதிகளை தாவா சொத்தில் இருப்பதை தடுத்து விட்டு பொய்யாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல இந்த வழக்கில் 1 ம் வாதி எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2025.11.06 15:50:27 +0530

District Munsif,
Aundipatti.